
## எஸ்.ஆர்.எம். கல்லூரியில் உலக சுற்றுச்சூழல் தின விழா

# முன்னோர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையில் நடப்போம்: வேந்தர் பாரிவேந்தர் அறிவுறுத்தல்



**சென்னை, ஜூன்.17–**

**பெருகிவரும் கரியமில வாயு மாசுவால் சுற்றுச்சூழல் பாதிப்பை தடுக்க நமது முன்னோர்கள் கையாண்ட பாரம்பரிய வாழ்க்கை முறைகளை நமது அடுத்த தலைமுறையினர் கடைபிடிக்க வேண்டும் என்று எஸ்ஆர்எம் கல்வி நிறுவனத்தின் வேந்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாரிவேந்தர் கூறியுள்ளார்.**

காட்டாங்குளத்தூர் எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தினவிழா நடைபெற்றது. மெய்நிகர் முறையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 900க்கும் மேற்பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள் காணொளி காட்சி மூலமாக பங்கேற்றனர். நிகழ்ச்சியில் எஸ்ஆர்எம் கல்வி நிறுவனத்தின் வளாக பொறுப்பு இணை இயக்குனர் திருமுருகன் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கு சுற்றுச்சூழல் பாதிப்பை தடுக்க அனைத்து நாடுகளுக்கான நிலையான இலக்கை உருவாக்க வேண்டும். இதற்கு மாணவர் சமுதாயம் துணை நிற்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் கொள்கைகளை உருவாக்கும் டிரி எனப்படும் தொழில்நுட்பம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் மறுவாழ்வு என்ற அமைப்பின் சேர்மன் ராஜேந்திர சின்டே நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், ‘‘உலகில் சுற்றுசூழலுக்கு உள்ள சவால்களை நாம் காண வேண்டும். பெருகி வரும் கரியமில வாய்வை கட்டுபடுத்த வேண்டும். இதற்கு மாணவர் சமுதாயம் துணை நிற்க வேண்டும். எங்கள் டிரி அமைப்பு எஸ்ஆர்எம் கல்வி நிறுவனம் அமைந்துள்ள நகரினை சுற்றுச்சூழல் மிகுந்த தூய்மையான ஸ்மார்ட் சிட்டியாக மாற்ற ஒப்பந்தம் செய்துள்ளது என்றார்’’.

நிகழ்ச்சியில் எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் துணைவேந்தர் சி.முத்தமிழ்ச்செல்வன் (பொறுப்பு) சிறப்புரையாற்றுகையில், ‘‘எஸ்ஆர்எம் நகரை ஸ்மார்ட் சிட்டியாக மாற்ற டிரி அமைப்புடன் எஸ்ஆர்எம் கல்வி நிறுவனம் இணைந்து உள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

### ஸ்மார்ட்சிட்டியாக மாற்றஒப்பந்தம்

காட்டாங்குளத்தூர் ஒன்றியம் பொத்தேரி எஸ்ஆர்எம் நகரம் சிறந்த தொழில்நுட்பத்துடன் சுற்றுச்சூழல் மிகுந்த எஸ்ஆர்எம் ஸ்மார்ட் சிட்டியாக மாற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனமும் டிரி என்ற சர்வதேச நிறுவனமும் கையொப்பமிட்டு ஒப்பந்தத்தை பரிமாறிக் கொண்டன.

இந்த எஸ்ஆர்எம் நகரை சிறந்த தொழில்நுட்பத்துடன் மாசு குறைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மிகுந்த ஸ்மார்ட் சிட்டியாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இங்கு தென்னிந்திய அளவிலான ஸ்மார்ட் கேம்பஸ் கிளவுட்ஸ் நெட்வொர்க் வசதி உருவாக்கப்பட உள்ளது. இதனை கொள்கைகளை உருவாக்கும் டிரி எனப்படும் தொழில்நுட்பம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் மறுவாழ்வு என்ற அமைப்பின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

எஸ்ஆர்எம் நகரம் தொழில்நுட்ப ஸ்மார்ட் சிட்டியாக மாற அங்கு சோலார் எனர்ஜி சிஸ்டம், புதுபிக்கப்பட்ட எரிசக்தி திட்டம், 0% மாசு திட்டம், பசுமை திட்டம், பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுடன் டிஜிட்டல் பரிவர்த்தனை உள்ளிட்ட பல்வேறு வகையான மாற்றங்கள் உருவாகும்.

எஸ்ஆர்எம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தினை எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் அணு ஆராய்ச்சி மையம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மெய்நிகர் கல்வி இயக்குநரக டீன் காந்தாதேவி அருணாச்சலம் தலைமையிலான குழு மேற்கொள்ளும்.



அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வத்தை, திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி. சீனிவாசன் எம்.எல்.ஏ., கழக அமைப்புச் செயலாளர், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி. தங்கமணி எம்.எல்.ஏ. ஆகியோர் நேரில் சந்தித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய மோடிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஸ்டாலினுக்கு ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, ஜூன்.17**

**‘நீட்’ தேர்வை ரத்து செய்ய பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தி உள்ளார்.**

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

‘நீட்’ தேர்வை ரத்து செய்ய முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றப்படும்’ என்று தேர்தல் வாக்குறுதி அளித்துவிட்டு, ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் கழித்து அதற்கு ஒரு குழுவை நியமித்து, அந்த குழு அறிக்கை அளிக்க ஒரு மாத கால அவகாசம் அளித்திருப்பது துரிதமான நடவடிக்கை அல்ல. மாறாக, காலந்தாழ்த்தும் செயல்.

12ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவக் கல்வி சேர்க்கை அமைய வேண்டும் என்பதும், ‘நீட்’ உட்பட அனைத்து நுழைவுத் தேர்வுகளையும் ரத்து செய்ய வேண்டும் என்பதும்தான் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு.

‘நீட்’ தேர்வினால் கிராமப்புற, நகர்ப்புற ஏழை, எளிய மாணவர்கள், அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள், தமிழ் வழியில் கல்வி பயில்வோர் போன்ற சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு கடந்த சில ஆண்டுகளாக மருத்துவக் கல்வி படிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சரே அறிவித்துவிட்டு, ‘நீட்’ தேர்வின் தாக்கம் குறித்து ஆராய குழு அமைப்பது என்பது, அவருடைய அறிவிப்பில் அவருக்கே சந்தேகம் இருக்கிறதோ என்ற எண்ணத்தை மாணவர்கள் மத்தியில் எழுப்புகிறது.

2006ம் ஆண்டிலேயே வல்லுனர் குழு இதுகுறித்து ஆராய்ந்து, அதன் அடிப்படையில் நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்ட நிலையில் மீண்டும் குழு அமைப்பது என்பது ‘அரைத்த மாவையே அரைப்பது’ போலாகும்.

‘கைப் புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?’ என்பது போல ‘நீட்’ ரத்துக்கு குழு எதற்கு?’ என்பதுதான் எல்லோரின் கருத்தாக இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததற்கு ஏற்ப முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ‘நீட்’ தேர்வு ரத்து குறித்த சட்டத்தை நிறைவேற்றி, ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுமட்டுமல்லாமல், பிரதமரை நேரில் சந்திக்கும்போது இதுகுறித்து விரிவாக எடுத்துரைத்து, ‘நீட்’ தேர்வை அகில இந்திய அளவில் ரத்து செய்ய அழுத்தம் அளிக்குமாறும் முதலமைச்சரை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ‘மெடால்’ பரிசோதனை மையத்துக்கு மீண்டும் அனுமதி

**சென்னை, ஜூன்.17–**

பிரபல மெடால் மருத்துவ பரிசோதனை நிறுவனம் மீண்டும் செயல்பட அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த மருத்துவ பரிசோதனை மையத்தை பார்வையிட்ட அரசு ஆய்வுக்குழு இதன் மருத்துவ பரிசோதனை செயல்முறை, முறையாக திருப்திகரமாக உள்ளது. அரசு அமைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை இந்த பரிசோதனை மையம் முழுமையாக பின்பற்றுகிறது என்பதை கண்டறிந்து மீண்டும் செயல்பட அனுமதி அளித்துள்ளது என்று இதன் தலைமை செயல் அதிகாரி அர்ஜுன் ஆனந்த் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த மருத்துவ பரிசோதனை மையம் முறையாக இந்திய மருத்துவ கவுன்சில் வழிகாட்டுதலுக்கு ஏற்ப இதன் ஊழியர்களுக்கு தடுப்பூசி போட ஏற்பாடு செய்துள்ளது.

கொரோனா வைரஸ் பரிசோதனை மற்றும் ரத்தத்தில் நோய் எதிர்ப்பு சோதனை செய்யும் வசதியை அதிக அளவில் கொண்டுள்ள ஒரு நிறுவனமாக மெடால் பரிசோதனை மையம் விளங்குகிறது. கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த தமிழக அரசின் முயற்சிகளில் நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம்.

இந்த மருத்துவ பரிசோதனை நிறுவனம் இதனுடைய கொரோனா வைரஸ் பரிசோதனை திட்டத்தை பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களில் ஊழியர்களுக்கு சிக்கன விலையில் அளித்து பாராட்டைப் பெற்றுள்ளது என்றார் அவர். மெடால் நிறுவனம் நாட்டில் எழுபது மாவட்டங்களில் 24 மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களை கொண்டுள்ளது. இது தவிர உலகத்தர 108 பரிசோதனை மையங்கள் இதற்கு உள்ளன. ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு இது மருத்துவ பரிசோதனை செய்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# மலைவாழ் மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்: கள்ளக்குறிச்சி புதிய கலெக்டர் பி.என்.ஸ்ரீதர் உறுதி



**கள்ளக்குறிச்சி, ஜூன் 17–**


**மலைவாழ் மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று புதிய கலெக்டர் பி.என்.ஸ்ரீதர் கூறினார்.**

கள்ளக்குறிச்சி மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது . இம்மாவட்டத்தின் 2 வது மாவட்ட கலெக்டராக பி.என். ஸ்ரீதர் பொறுப்பேற்றுக்கொண்டார். பி.என். ஸ்ரீதர் , இதற்கு முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார இணை ஆணையளாராக 2 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவரது சொந்த ஊர் ஐதராபாத் ஆகும். மனைவி மற்றும் இரண்டு மகன்கள் உள்ளனர் . தமிழ் ஆங்கிலம் , ஹிந்தி , தெலுங்கு மொழிகள் நன்கு அறிந்தவர்.2012 இந்திய ஆட்சிப் பணியில் சேர்ந்தவர்.

புதிய கலெக்டர் பி.என்.ஸ்ரீதர் கூறியதாவது:

அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதோடு பொதுமக்களின் அடிப்படை தேவைகள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது கொரோனா நோய் தொற்று மற்றும் தடுப்பு நடவடிக்கைகளான தடுப்பூசி, ஆக்ஸிஜன் வசதிகள் , படுக்கை வசதிகள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, கொரோனா செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். அனைத்து துறை அரசு அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது . ஆலோசனைக் கூட்டம் முடிந்தப் பின்பு அனைத்து துறைகளின் செயல்பாடுகளும் விரைந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மலைவாழ் மக்கள் இம்மாவட்டத்தில் இருப்பதால், மலைவாழ் மக்களுக்கென தமிழக அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் விரைந்து அவர்களை சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . மேலும் லைவாழ் மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.




# சர்வதேச விருதுகள் பெற்ற லீனா மணிமேகலை இயக்கிய ‘மாடத்தி’ போஸ்டர் வெளியீடு

**சென்னை, ஜூன். 17–**

**பல்வேறு நாடுகளில் நடைபெற்ற திரைப்பட விழாக்களில் விருதுகள் பெற்ற டைரக்டர் லீனா மணிமேகலை எழுதி, இயக்கிய ‘மாடத்தி’ திரைப்பட போஸ்டரை நடிகை பார்வதி வெளியிட்டார்.**

தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள ஒரு சமூகத்தினரை பற்றிய இந்த கதை ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்கொண்ட அடக்குமுறைகளை விளக்குகிறது. பாலின, ஜாதி, மத வன்முறையால் பாதிப்பு போன்றவற்றை விளக்கும் இந்த ‘மாடத்தி’ திரைப்படம் அழகிய கலைப் படைப்பாக தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே லீனா மணிமேகலை உருவாக்கிய பல்வேறு படைப்புகள் தனித்திறமை உள்ள படங்களாக நிலைநாட்டி பாராட்டுகளை பெற்றுள்ளது.

இந்த மாடத்தி திரைப்படம் ஏற்கனவே தென்கொரியா கொல்கத்தா, லத்தீன் அமெரிக்கா, ஆசிய திரைப்பட விழா, சிக்காகோ திரைப்பட விழா போன்ற பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களால் பாராட்டு பெற்றுள்ளது.

லீனா மணிமேகலையுடன் இணைந்து ரபிக் இஸ்மாயில், யவனிகா ஸ்ரீராம் திரைக் கதையை எழுதியுள்ளனர். ஜெப்டோலன், அபிநந்தன் ராமானுஜம் மற்றும் கார்த்திக் முத்துக்குமார் ஒளிப்பதிவு செய்துள்ளனர். தொடக்கத்தில் கூட்டு நிதி திட்டத்தில் தொடங்கப்பட்ட இந்த படம் பின்னர் பாவனா கோப ராஜ், பியூஸ் சிங் அபிநந்தன் ராமானுஜம் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர்.

இந்த திரைப்படத்தில் அஜ் மீனா காசிம் பேட்ரிக் ராஜ் செம்மலர் அன்னம் மற்றும் அருள்குமார் முக்கிய கதாபாத்திரங்களில் அந்த சமூக மக்களே பங்கேற்று நடித்துள்ளனர். தங்கராஜ் படத்தொகுப்பு செய்ய, தபஸ் நாயக் ஒலி வடிவமைப்பு செய்துள்ளார். மோகன மகேந்திரன் கலை இயக்கம் செய்துள்ளார்.

கார்த்திக்ராஜா இதற்கு இசை அமைத்துள்ளார். ரவிசங்கர் விளம்பர வடிவமைப்பு செய்துள்ளார்.

கருவாச்சி பிலிம்ஸ் தயாரிப்பில் உருவான ‘மாடத்தி’ திரைப்படம் 24ந் தேதி நீ ஸ்டிரீம் (Neestream) வலைதளத்தில் வெளியாகிறது.




முதலமைச்சரின் அறிவுரையின்படி, சென்னை, கிண்டி நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் பொதுப்பணித் துறை திட்டப் பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, அரசு சிறப்பு செயலாளர் கே.அசோகன், முதன்மை தலைமைப் பொறியாளர் இரா. விஸ்வநாத், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# நவி பொது இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மருத்துவக் காப்பீட்டுக்கு பிரீமியம்: மாத தவணையில் செலுத்த ஏற்பாடு

**சென்னை, ஜூன்.17–**

**நவி பொது இன்சூரன்ஸ் நிறுவனம் மருத்துவக் காப்பீட்டுக்கு பிரீமியத்தை மாத தவணையில் செலுத்த ஏற்பாடு செய்துள்ளது. முழுவதும் டிஜிட்டல் மயமான இந்த நவி பொது இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நவி ஹெல்த் செயலி மூலம் விண்ணப்பித்த 2 நிமிடங்களில் டிஜிட்டல் முறையில் மருத்துவக் காப்பீடு பாலிசியை பெறலாம்.**

இதற்கான மருத்துவ பாலிசிகள் ரூ.2 லட்சத்தில் தொடங்கி

ரூ.1 கோடி வரை மதிப்பில் கிடைக்கும். இறப்பிற்கு பின் இன்சூரன்ஸ் தொகை விண்ணப்பித்தவர்களில் 97.3% பேர் உடனடி பலன்களை பெற்றுள்ளனர் என்று இதன் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ராமச்சந்திரா பண்டிட் தெரிவித்தார்.

இந்தியாவில் மருத்துவக் காப்பீடு பாதுகாப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதற்கு காரணம் மொத்தமாக மருத்துவ பாலிசி பெறுவதற்கு தேவையான பணம் இருப்பதில்லை. இதற்கு விண்ணப்பிப்பது கடினமாக இருந்தது. இதனால் செயலி மூலம் விண்ணப்பித்து இன்சூரன்ஸ் தொகையை மாதம் குறைந்தபட்சமாக ரூ.240 வீதம் பாலிசி தொகையை செலுத்தி மருத்துவ இன்சூரன்ஸ் திட்டத்தில் சேரலாம் என்றார் அவர்.

தற்போது நவி ஹெல்த் செயலி மூலம் மருத்துவக் காப்பீடு பாலிசி வாங்கலாம். இதன்வாடிக்கையாளர்கள் நாட்டிலுள்ள 400 ஊர்களில் உள்ள 10 ஆயிரத்துக்கும் அதிகமான முன்னணி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியும்.

இந்த நவி ஹெல்த் இன்சூரன்ஸ் 20–க்கும் மேற்பட்ட கட்டணமில்லா சிகிச்சை பெறும் மருத்துவக் காப்பீடு திட்டங்களை வழங்கியுள்ளது. இதில் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பும், சிகிச்சை பெற்ற பின்பும், ஏற்படும் செலவுகளை இழப்பீடாகவும், கொரோனா தொற்று நோய்க்கும் மருத்துவம் செய்தல் போன்ற 393 வகையான மருத்துவ முறைகளுக்கு இன்சூரன்ஸ் வசதியை நவி பொது இன்சூரன்ஸ் வழங்குகிறது என்றார்.


## ஏவிடி நேச்சுரல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 60 ருக்மணி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 600 008. Tele.fax: 044-28584147.
Email : avtnpl@avtnatural.com, www. avtnatural.com
CIN : L15142TN1986PLC012780

### அறிவிப்பு

(சமஉரிமையுள்ள சாதாரண பங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்திற்கு மாற்ற, கடமையாக செய்ய வேண்டியவை)

2016ம் வருடத்தைய முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையம் (கணக்கு தணிக்கை, மாற்றம் மற்றும் திருப்பி அளித்தல்) விதிகளின்படி மாற்றி அமைக்கப்பட்டது தொடர்பாக இந்த அறிவிப்பு பிரசுரிக்கப்படுகிறது. மேற்கண்ட விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124–ன்படி பங்குதாரர்களுக்கு தொடர்ந்து ஏழு வருடங்களோ அல்லது அதற்கு மேலாகவோ, பங்கு ஆதாயத் தொகை வழங்கப்படாத அல்லது கோரப்படாத சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி துவக்கப்படவுள்ள சஸ்பென்ஸ் கணக்கிற்கு கம்பெனி மாற்ற வேண்டும்.

மேற்கண்ட விதிகளுக்கிணங்க, கம்பெனி

அ) முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் சஸ்பென்ஸ் கணக்கிற்கு பங்குகள் மாற்றப்பட வேண்டிய அனைத்து பங்குதாரர்களுக்கும் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளது மற்றும்

ஆ) பங்கு ஆதாயம் கோரப்படாத, முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய பங்குகள் மற்றும் பங்குதாரர்களின் விவரங்கள் கம்பெனியின் இணையதளம் www.avtnatural.com / investor_relations-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (பங்குதாரர்கள் மாற்றப்படவேண்டிய கோரப்படாத பங்கு ஆதாயம் மற்றும் பங்குகள் பற்றிய விவரங்கள் மற்றும் தெளிவான நடைமுறைகள் ஆகியவற்றை பற்றி தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.)

ஆகஸ்டு 21, 2021 தேதிக்குள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடம் இருந்து தகவல் எதுவும் கம்பெனியால் பெறப்படவில்லையென்றால் சம்பந்தப்பட்ட பங்குகளை கம்பெனி மேற்கண்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் சஸ்பென்ஸ் கணக்கிற்கு விதிகளின்படி மாற்ற உள்ளது.

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையம்/ஆணையத்தின் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்ட கோரப்படாத பங்கு ஆதாயம் மற்றும் பங்குகள் மீது கம்பெனிக்கு எந்த ஒரு பொறுப்பும் கிடையாது. இருப்பினும், முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையம்/ஆணையத்தின் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்ட கோரப்படாத பங்கு ஆதாயம் மற்றும் பங்குகள் ஆகியவற்றை பங்குதாரர்கள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்திடம் அதற்கான விதிகளின்படி கோரி பெறலாம்.

மேற்கண்ட விஷயத்தில் ஏதேனும் சந்தேகமிருந்தால், பங்குதாரர்கள் கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்றுப் பிரதிநிதிகள், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், ‘சுப்ரமணியம் பில்டிங்ஸ்’, 5வது மாடி, எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600 002, தொலைபேசி எண். 044-28460390/395 தொலைநகல் : 044-28460129, மின்னஞ்சல் முகவரி investor@cameoindia.com என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

ஏவிடி நேச்சுரல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
(ஷரன் ஜோஷ்)
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி : 16.06.2021



## இந்தோ ஏஷியா பைனான்ஸ் லிமிடெட்

CIN: L65191TN1990PLC019060

பதிவு அலுவலகம் : எண். 15, நியூ கிரி சாலை, தி.நகர், சென்னை – 600 017. Tel: 044- 2834 2111

Email: info@indoasiafinance.com; Website: www.indoasiafinance.com

**31 மார்ச், 2021ல் முடிந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்.**

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு (தணிக்கையானது) 31.03.2021 | முடிந்த ஆண்டு (தணிக்கையானது) 31.03.2021 | முடிந்த காலாண்டு (தணிக்கையானது) 31.03.2020 |
|---|---|---|---|
| செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | 44.95 | 59.61 | 0.88 |
| காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு முன்) | 78.83 | 18.04 | (28.35) |
| விலக்கு அயிட்டங்கள் | 516.08 | 516.08 | --- |
| காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன்) | 594.91 | 534.12 | (28.35) |
| காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) | 594.91 | 534.12 | (28.35) |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | –– | –– | –– |
| சமபங்கு மூலதனம் | 900.00 | 900.00 | 900.00 |
| கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | (203.01) | (203.01) | (737.13) |
| ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/–) | | | |
| 1. அடிப்படை | (6.61) | (5.93) | (0.31) |
| 2. டைலூட்டட் | (6.61) | (5.93) | (0.31) |

குறிப்பு: SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு/ஆண்டுக்கான முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.indoasiafinance.com) ல் உள்ளது.

மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு, 16 ஜூன், 2021–ல் நடந்த இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இயக்குனர்கள் குழு சார்பாக
**இந்தோ ஏஷியா பைனான்ஸ் லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/– பதம் ஜெ ஜல்லானி**
**நிர்வாக இயக்குநர்**

**தேதி : 16 ஜூன், 2021**
**இடம் : சென்னை**

# 95% of vaccinated healthcare staff got protection against COVID: Apollo Hospitals study



New Delhi, June 17: Apollo Hospitals, New Delhi today released the results of a multicenter study of healthcare workers across India to evaluate the incidence of post-vaccination infections (PVIs).

The study that took place over four and a half months, from January 16thto May 30th, 2021,and covered 31,621 healthcare workers who had received either both doses or the first dose only of theCovishield and Covaxin Covid vaccines.

Dr. Prathap C Reddy, Founder Chairman, Apollo Hospitals Group said, "This study reiterates the fact that our mainstay against Covid-19 is mass vaccination. Vaccines are not only safe, but they also help prevent severe manifestations of Covid-19 and will help save lives. The results of this large study across India make for a compelling case for citizens above the age of 18 to come forth and get vaccinated in order for us as a country to tide over the Covid-19 crisis".

Dr. K Hariprasad, President – Hospitals Division, Apollo Hospitals Group said, "This is one of the largest cohorts of vaccinated healthcare workers (HCWs) analyzed in the country, so far. The 31,621 HCWs covered under the study were from 43 units of the Apollo Hospitals group across 24 cities in the country. The HCWs covered various categories including doctors, nursing, paramedical as well as support and administrative staff. We thank them for participating in this study, which has helped highlight the role of vaccines in our fight against Covid-19".."While the study emphasizes the fact that COVID-19 vaccines are effective, it is important to continue with COVID safe behavior even when fully vaccinated such as wearing a mask, sanitizing hands, maintaining appropriate social distance, and avoiding crowds" added Dr Hariprasad.

Dr. Anupam Sibal, Group Medical Director and Senior Pediatric Gastroenterologist, Apollo Hospitals Group said, "Out of the fully vaccinated workers, 1061 or 4.09% reported post-vaccination infections, while 294 or 5.14% of the partly vaccinated workers tested positive", Dr Sibal added.

Dr. Raju Vaishya, Senior Consultant Orthopedics and Joint Replacement Surgeonand one of the key authors of the study, said, "Of the 90 cases who required hospitalization, 48 were females with the majority i.e., 83 cases being below 50 years of age.

The findings of the study are under consideration for publication in a peer-reviewed medical journal.

"Despite the high infection rate in the community during this period, the vaccinated HCWs were protected."said Mr. SV Kiran, Senior Vice President & Head - Human Resources, Hospitals Division, Apollo Hospitals Group

# SBI offers loans restructuring facility

Chennai, June 17: SBI is offering restructuring of loans to its eligible p-segment borrowers for loans availed under home loans, xpress credit, education loans and auto loans.

Eligible borrowers may access the following link - https://covid19restruct.sbi.co.in:8443/EMIRestruct/EMI_CustomerLogin.jsp and opt for restructuring (under resolution framework 2.00).

# Corporates turn to GBCI's 'LEED Safety First Pilot Credits'

Chennai, June 17: GBCI India, the nation's foremost authority on sustainability in building design, construction and operation and the certification body for the LEED green building program, announced that it has received interest from corporates in the country for adopting its LEED Safety First Pilot Credits and Arc Re-Entry programme. Launched in response to the global pandemic, the nine LEED Safety First Pilot Credits outline sustainable best practices related to cleaning and disinfecting, workplace re-occupancy, HVAC and plumbing operations, building water system recommissioning and pandemic preparedness and response. Arc Re-Entry is a set of tools that can be used to document and benchmark infection-control policies and procedures, collect and analyze occupant experiences and to measure and track indoor air quality, thereby giving employers the opportunity to transparently provide their staff with a safe and healthy work environment.


# Akshaya conducts free vaccination drive for customers

Chennai, June 17: Leading real estate developer, Akshaya Pvt Ltd, regarded highly for its quality, innovation, transparency & ethical business has started a free vaccination drive for employees & their family members, labourers, channel partners & their family members, and customers across different projects. The vaccination drive is being carried out at its OMR office premises, for the employees and their families, along with channel partners. Additionally, the drive is also taking place at many ongoing and completed projects for its existing customers (residents) and labourers, with adherence to all safety measures.

T. Chitty Babu, Chairman & CEO, Akshaya Pvt Ltd said "The vaccination drives are a pro-active step to ensure the safety of our employees, labourers, channel partners and customers, along with their families."

## Bob's Banter

Robert Clements



## Protest is a Right..!

*'Protesting without arms is a fundamental right and not a terrorist activity'*
*Delhi High Court*

Even as the high court gives citizens of our country the right to protest, I do believe that the greatest gift a leader can gift himself or herself, are people who have the freedom to disagree with the leader.

"Sir, I don't agree with your views!" is a statement one should welcome, whether it's from one's own advisors or the opposition. Because that disagreement is founded on the initial thought of a leader which means that the view point has moved forward, and whatever comes out of that debate which follows, will be a deeper, wider and broader consensus.

If there are ten people at the meeting, it is the collective intelligence of ten, instead of just one.

History books will tell you without hesitation that such combined thinking has always moved the world forward.

Rulers of yore who had their cabinets filled with 'yes men' soon found themselves on the streets.

One mistake we make is to mistake a strong man as one who takes no advice but his own. On the contrary that's a weak person. His insecurity makes him feel any contradiction to his views is a personal affront.

No, it isn't, and the day, he or she is willing to just listen and agree or disagree later, is able to use debate to try and convince opponents, then that man or woman is on his or her way towards being a strong leader.

A strong leader will allow people the freedom to disagree or even protest.

A weak leader clamps down on those who do so.

To find out how the greatest nation in the world, reached that pinnacle, one has only got to open one's books of history and see arguments that fashioned great thought.

To understand this even further, one has to accept that each of us is blessed by our creator with different gifts that mould our belief systems. A businessman who has come up by his britches, may feel that hard work is the only way to success and looks down on handouts and freebies, whereas someone who was helped with a scholarship or financial grant, will most probably have a compassionate heart to help the less fortunate as he was helped.

These two minds will collectively shape an idea that can better society. And if it's ten minds, more ideas and a stronger plan. All this comes through argument, debate and convincing.

But when a company or country starts curbing the freedom to disagree, then comes a quick and steady decline of that body.

"Sir, I don't agree with your views!"

"Come to Delhi, sit with me, and let us listen to one another!"

That is the only way forward. Any other route spells disaster..!

**bobsbanter@gmail.com**




Join the Bob's Banter Writers Course

*Write a Book!*
*Write for newspapers!*
*Write Web content*

**Just One Month, 4 hours a week, Fri-Sat, 6-8 pm and write like a Professional**

Send a 👍 to:
**+91 98925 - 72883**


# India's consumer credit market to grow at higher rate

Chennai, June 17: India's credit ecosystem remains resilient despite the pandemic, as revealed in the latest joint report, "A Review of India's Credit Ecosystem" by Experian, the world's leading global information services company, and Invest India, the national agency for investment and facilitation.

The report's data, which tracks India's credit ecosystem from March 2017 to February 2021, highlights a V-shaped recovery across Indian markets, with a gradual and steady improvement in sourcing trends. New sourcing crossed the pre-COVID-19 level in October 2020; however, sourcing volumes declined from January 2021 onwards due to the second COVID-19 wave and lockdowns being imposed. A remarkable recovery was observed across all unsecured credit products. Recovery of personal loans has been high in both low (<Rs 1 Lakh) and high (>Rs 5 Lakh) ticket size segments while the recovery in higher ticket size loans is also improving steadily. The credit portfolio has been resilient, in February 2021, growth stood at eight per cent year-on-year for the portfolio of key products, lower than the 13 per cent observed for March 2020. The pace of growth slowed down for all products, however, with unsecured products experiencing a faster year-on-year growth rate compared to secured loans.

## PUBLIC NOTICE LOST DOCUMENT

My client Mr.S.N.langovan, Son of Mr.S.A.Natarajan, aged 49 years & Mrs.M.Usha, Wife of Mr.S.N.langovan, aged 41 years, both are permanently residing at No.3/3, T.V.Colony, 10th Sector, K.K.Nagar, Chennai-600078, is the absolute owner of the property measuring an extent of owner of the property measuring an extent of 0.37 Sq.Meter Land & Building, in Survey No.233 Part, bearing at Door No.3/3, 10th Sector, Thiruvalluvar Colony, West K.K.Nagar, Kodambakkam Pudur Part-II, Chennai-600078, Tenement No.3/3. They have purchased the site property from Mr.Paramasivam & Mrs.Parvathy represented by their Power Agent Mr.S.M.Jegannathan, under a Registered Sale Deed Document No.2750/2005, Book 1, dated 19.05.2005 on file of the Sub Registrar Office, Virugambakkam the above said mother document Original Registered Power Deed Document No.522/2005, Book IV, date: 18.05.2005 (Alandur S.R.O.) was lost my client in Xerox shop near Bank of India, Usman Road Branch on 05.04.2021 during his visit to meet his Bank Panel, Bank of India, T.Nagar, Usman Road for the purpose of Bank Loan. If any person found the said document please contact me and handover the same to me or my client at the above address (or) police station. The general public notice is hereby warned not to enter any type transaction in any manner with regards to the above property with any person. If they are doing so they are at their own risk and will not bind my client or on the property.

**P.KOTHANDARAMAN**
ADVOCATE
No.128/4, 4th STREET,
SAMAYAPURAM NAGAR, PORUR,
CHENNAI-600116.
CELL: 9003252504

## NOTICE

Notice is hereby given that the share certificate number 6148 bearing distinctive numbers 1380566 to 1380625 for 60 equity shares face value Rs. 2 each of Kirloskar Pneumatic company limited under folio no. M02439 standing in the name of Vinod Kumar Mehta have been lost and misplaced and undersigned have applied to the company to issue duplicate share certificates for the said shares. Any person who have claimed in respect of the aforesaid shares should lodge claim for the same with the company at its registered office: Hadapsar Industrial Estate, Hadapsar, Pune – 411013, within 15 days from the date of this notice, else the company will proceed to issue duplicate share certificates.

Date: 17/06/2021 — Vinod Kumar Mehta
Place: Chennai — Name of the shareholder

## PUBLIC NOTICE

My client Mrs.J.Florence Arputha Jothi states that, the property, bearing Plot No.176, Kamakoti Nagar, measuring an extent of 3600 sq.ft., Layout approved vide LPDM/DTP No.1/1973, comprised in Survey Nos. 631 and 640 Part of Pallikuranai Village, was purchased by my client from Mr.A.John Anthony Muthu, through a Sale deed dated 17.05.2002. which was registered as Doc.No.2480 of 2002 in the SRO of joint–I, Saidapet, The original parent document, being the Sale Deed of Flight Lt. L.S.Vaidyanathan, executed by The Mordern Builders represented by its Chief Partner Mr.P.Ganesan, which is dated 22.02.1975, registered as Document No.174 of 1975, in the SRO of Joint-I Saidapet has been irrecoverably lost and it is not traceable, in spite of best efforts. My client has an intention to sell the said property. Any person having any interest over the said property, or in possession of the said lost document, is hereby called upon to intimate/handover the same to the undersigned within 15 days from the date of this publication, failing which it shall be deemed that the title to the property is perfect, marketable, and free from encumbrances.

**Sujatha Venugopalan**
Advocate
No.16, 9th Street, Nanganallur,
Chcnnai - 600 061, PH: 99406 50829

## LANCOR HOLDINGS LIMITED

LANCOR FUTURE-READY

**VTN SQUARE, 58, G N Chetty Road, T. Nagar, Chennai – 600017**
**Phone: 044- 28345880,81, Fax: 044- 2834 5885**
**Email: compsecy@lancor.in Website: www.lancor.in**
**CIN: L65921TN1985PLC049092**

**NOTICE**
**(For Mandatory transfer of Equity Shares to IEPF Authority)**

This notice is published pursuant to the notification of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules 2016 ('the Rules') as amended to date. The said Rules, read with provisions of section 124 of the Companies Act, 2013, require the Company to transfer all the equity shares in respect of which dividend has not been claimed by the shareholders for 7 consecutive years or more to the Investor Education and Protection Fund Authority (IEPFA) in the name of IEPF Suspense Account opened by the Authority.

In compliance with the above, the Company has now:

a. Communicated individually to all the shareholders concerned, whose shares are liable to be transferred to the above referred IEPF Suspense Account; and

b. Uploaded the full details of such shareholders and shares due for transfer to the above, referred IEPF Suspense Account on its website http://www.lancor.in/ (shareholders are requested to ascertain the details of unclaimed dividends and the shares that are liable to be transferred to the IEPF Suspense Account together with the detailed procedure on the matter).

If the company does not receive any communication from the shareholders, on or before, 20th September 2021, the company shall transfer the shares concerned to the above referred IEPF Suspense Account as per the procedure set out in the rules. Thereafter no claim shall lie against the company in respect of unclaimed dividend and shares transferred to IEPF/ IEPF Suspense Account respectively.

However, both the unclaimed dividend and shares transferred to IEPF/ IEPF Suspense Account can be claimed by the shareholders from the IEPF Authority by following the procedures prescribed in the said rules.

For any queries on the above, the shareholders may contact the Company's Registrar and Share Transfer Agent, M/s. Cameo Corporate Services Limited, Subramanian Building, 5th Floor No.1, Club House Road, Chennai - 600 002, Phone : 044 – 28460390, Fax : 044 – 28460129, e-mail: investor@cameoindia.com.

**For LANCOR HOLDINGS LIMITED,**
**Place: Chennai — B. Sanjeev Anand**
**Date: June 16, 2021 — Company Secretary**

## NAME CHANGE

I, F X Zico Simouli Caarlas, Father Name: T Francis Xavier, Date of Birth: 09.10.1995, Residing at No. 1/31, Thamarai Flats, NSK Street, Sithalapakkam, Chennai – 600 126, shall henceforth be known as **F X ZICO SIMOULI CARLOS.**

F X Zico Simouli Caarlas

## NAME CHANGE

I, Marcus Ashley Clay, S/o: Herbert Mervyn Clay, Date of Birth: 31.08.1978, Residing at Prapancha Apts, Block–4, Flat No. 2C, Madha Koil Street, Okkiyam Thuraipakkam, Chennai – 600 097, shall henceforth be known as **Sur Name: CLAY, Given Name: MARCUS ASHLEY.**

Marcus Ashley Clay

## NAME CHANGE

I, V.SUDHAKAR, S/o: K.S.Venkatraman, Date of Birth: 24.06.1978, Residing at Old No.3, New No. 159–C, Teachers Colony 3rd Cross Street, Vettuvankeni, Chennai – 600 115, shall henceforth be known as **S.V.SUDHAKAR.**

V.SUDHAKAR

## DOCUMENT MISSING

**Lost my documents of property.**
1. Registered No.1/3302/2007, Kadayam Register Office, Tenkasi District.
2. Registered No. 1/10702/2012, Ambattur Register Office, Chennai District. This are documents are missing while we were shifted rental house from Kallikuppam, Chennai - 53 to Thirumullaivoyal, Chennai -62 on 10.02.2020. Finder may send to **Mrs. Leethiyal Prince,** 12A, Ambedkar Street, Vijayalakshmipuram, Ambattur, Chennai -53. **Contact No. 9444329827**

## PUBLIC NOTICE

Please take notice that my client Mr.K.SRIDHARAN, S/o.Krishnanswamy, aged about 58 years, residing at No.30/28, Rajavelu Street, Perambur, Chennai - 600011, Tamil Nadu, India, he lost original Sale Deed bearing the Document No. 2770/2001, Registred office Redhills and original Rectification deed bearing the document No.R / Redhills/Book 1 / 4821 / 2001 registred office at Redhills.
if anybody find the same original documents please handover to me or to my client direetly if anybody misuse the same that will be at their own risk and cost.

**A.S.BALASUBRAMANIAN B.A.B.L.,**
Advocate & Notary
ENROLLMENT No. 621/81
No.2, SHOPPING COMPLEX,
Sidco Nagar, Villivakkam,
Chennai– 600 049 Mobile: 9940111654

**Form No. INC-25A**

Before the Regional Director, Ministry of Corporate Affairs
Southern Region

In the matter of the Companies Act, 2013, section 14 of Companies Act, 2013 and rule 41 of the Companies (Incorporation) Rules, 2014

AND

In the matter of M/s Chandrakala Resort Hotels Limited having its registered office at No 29, Tilak Street, T. Nagar, Chennai - 600017, Applicant

Notice is hereby given to the general public that the company intending to make an application to the Central Government under section 14 of the Companies Act, 2013 read with aforesaid rules and is desirous of converting into a private limited company in terms of the special resolution passed at the Extra Ordinary General Meeting held on 29th January, 2021 to enable the company to give effect for such conversion.

Any person whose interest is likely to be affected by the proposed change/status of the company may deliver or cause to be delivered or send by registered post of his objections supported by an affidavit stating the nature of his interest and grounds of opposition to the concerned Regional Director (complete address of the Regional Director to be given), within fourteen days from the date of publication of this notice with a copy to the applicant company at its registered office at the address mentioned below:

No 29, Tilak Street, T. Nagar, Chennai - 600017

For and on behalf of the Applicant
Srinisha Jagathrashakan
Director
Place: Chennai
Date: 07/06/2021 — DIN: 01728749

## PUBLIC NOTICE

The Public in general are hereby put on Notice that my clients Mrs.Revathi and Mr.Munusamy Ravichandran are the legal heirs of late Mrs. Vasantha Kumari, who was the absolute owner of the property described in the schedule hereunder. The above mentioned Mrs. Vasantha Kumari had purchased the Land and Building for an extent of 2502 ½Sq. ft from Bhvaneswari Ammal and others under Sale Deed dated 20.12.1975 and registered as Document No.1953/1975 on the file of SRO Tiruvottriyur. On 30.12.2008, my clients mother Vasantha Kumari lost the Original Sale deed Document No.1953/1975 dated 20.12.1975. A complaint was made by my clients mother Vasantha Kumari before the H-3 police station, Tiruvotriyur and thereafter paper publication also issued in "Makkal Kural"Chennai edition on 13.01.2009. My clients mother Mrs. Vasantha Kumari W/o. Munusamy Mudaliyar died on 07.06.2017 and Subsequently my clients father Munusamy Mudaliyar H/o.Vasantha Kumari also died on 01.07.2018, leaving behind my clients, as her legal heirs to succeed the estate of Vasantha Kumari. Mrs. Revathy intends to execute the Settlement Deed in favour of her elder brother Mr. Munusamy Ravichandran. If anyone in possession of the above stated document or has knowledge of the, whereabouts the same or has any claim to the said property they must make out their objections / claims to me in writing or in person within 10 days of this publication. If no objections /claims are received, it would be presumed that the legal heirs of the late. Vasantha Kumari have clear and marketable title to the below mentioned schedule property and all subsequent claims/ objections shall be deemed to have been waived and the Settlement Deed also be executed.

**Schedule Property**

House and Ground bearing in Door No.19, Ezhuthukaran street, Kaladipet, Chennai-600019 Compripsed in Survey No.173/1 now in T.S.No.20/2 Sathangadu village, Madura Kaladipet, Tiruvottriyur Taulk, Chennai District, measuring an extent of 2502 ½Sq. ft of Land together with building EB connection and etc and bounded on the:
North by: House and Garden belonging to Krishnasamy chetty;
South by: House and Garden belonging to Arumuga Mudaliyar;
East by: Ezhuthukaran street;
West by: House and Garden belonging to Krishnasamy chetty;
Lying within the Registration District of North Chennai and Sub Registration District of Tiruvottriyur.

**Deepa Vadivel,**
Advocate, 756/6, II Floor,
South Colony. ICF, Chennai - 600038.
Mobile# 87544 97779

## INDO ASIA FINANCE LIMITED

**CIN: L65191TN1990PLC019060**
**Redg. Off: No.15, New Giri Road, T.Nagar, Chennai - 600017 Tel: 044- 2834 2111**
**Email: info@indoasiafinance.com; Website: www.indoasiafinance.com**

**EXTRACT OF AUDITED STANDALONE FINANCIAL RESULTS FOR THE YEAR ENDED 31st MARCH, 2021**

(Rs. in Lakhs)

| Particulars | Quarter ended | Year ended | Quarter ended |
|---|---|---|---|
| | (Audited) | (Audited) | (Audited) |
| | 31.03.2021 | 31.03.2021 | 31.03.2020 |
| Total Income from Operations | 44.95 | 59.61 | 0.88 |
| Profit / (Loss) for the period (before Exceptional Items) | 78.83 | 18.04 | (28.35) |
| Exceptional Items | 516.08 | 516.08 | --- |
| Profit / (Loss) for the period (before Tax) | 594.91 | 534.12 | (28.35) |
| Net Profit / (Loss) for the period (after tax) | 594.91 | 534.12 | (28.35) |
| Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | --- | --- | --- |
| Equity Share Capital | 900.00 | 900.00 | 900.00 |
| Reserves (excluding Revaluation Reserve) as shown in the Balance Sheet of the previous year | (203.01) | (203.01) | (737.13) |
| Earnings Per Share (of Rs. 10/- each) 1. Basic 2. Diluted | (6.61) (6.61) | (5.93) (5.93) | (0.31) (0.31) |

Note: The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results is available on the Stock Exchange websites (www.bseindia.com) and on company (www.indoasiafinance.com)

The above results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on 16th June 2021.

for&on Behalf of Board of Directors
Indo Asia Finance Limited
Sd/-
Date: 16th June 2021 — Padam J Challani
Place: Chennai — Managing Director